**டிசம்பர் -7**

**அவர் வையப்படும்போது பதில் வையாமலும், பாடுபடும்போது பயமுறுத்தமலும், நியாயமாய்த் தீர்ப்புச் செய்கிறவருக்குத் தம்மை ஒப்புவித்தர். - 1பேது 2.23.**

யேசுக்கிறிஸ்துவை வையவும், அவர் பேரில் தீமையான மொழிகளை பேசவும் சரியான நியாயமான ஏதோ ஒன்றை அவருடைய விரோதிகள் அவரில் கண்டு கொண்டார்கள். என்ற காரணத்தினால் அல்ல, அவர் அவர்களை வையவும், தீமையான மொழிகளை அவர்கள் பேரில் பேசவும் அவர்களிடத்தில் அவர் ஒன்றையும் கண்டுக்கொள்ளக்கூடாதபடி அவருடைய விரோதிகள் கிட்டத்தட்ட அவ்வளவு பூரணமாய் இருந்தார்கள் என்றும் அல்ல, ஆனால் அவர் தெய்வீகச் சித்தத்திற்கு அவ்வளவு பூரண கீழ்ப்படிதலுள்ளவராய் இருந்த காரணத்தல் பரிகாசத்தையும், தூஷணங்களையும் சகிக்கவும், இவைகளை தாழ்மையுடனும், பொறுமையுடனும் தாங்கிக்கொள்ளவும் சாத்தியமாக்கப்பட்டார். இதற்காகவே அவர் அழைக்கப்பட்டார் என்பதை நினைவுகூருவதற்காகவே யேசு பொறுமையோடு சகித்து படிப்பினைகளை படித்து உண்மையுள்ளவரென்பதைத் தாமே நிருபித்தார். தன்னுடைய உண்மையான குணத்தைத் தோற்றுவித்து மெய்ப்பித்துக் காட்டினார். ஜனங்களுக்காகத் தங்களுடைய குருட்டாட்டத்தில் அறிவீனத்திலும் தன்னுடைய இரக்கத்தையும், அன்பையும் உணர்ந்து வெளிப்படுத்தினார். **- Z 01. 298 (R 2877).**

வைவது என்பது அநியாயமாகவும், அவசியமில்லாமலும் புகழ்ச்சியற்ற காரியங்களை மற்றவர்கள் பேரில் சொல்லுதலாகும். யேசு தீர்ப்பைப் பெற்றபின்பு காய்பாவின் அரண்மனையிலும், பிலாத்துவின் அரண்மனையிலும் போர் சேவகராலும், வழியிலும், கல்வாரியிலும், போர்சேவகராலும் ஜனங்களாலும் முக்கியமாக வையப்பட்டார். அவர் வையப்படுவதற்குத் தகுதியுள்ளவராயில்லாமலும், ஆனாலும் அவர்கள் வையப்படுவதற்குத் தகுதியுள்ளவர்களாயிருந்தபொழுது, அவர் பதிலுக்கு அவர்களை வையாமலும் இருந்தார். சந்தேகமில்லாமல், அவர்களுடைய இழிவான வார்த்தைகளையும், கிரியைகளையும் அவருடைய மனதில் வைத்து அவரில் வையும் ஆவியையும் வார்த்தைகளையும் கிரியைகளையும் தூண்டிவிட சாத்தன் நாடினான். அதில் அவன் தவறிப்போனான். ஏனென்றால் நம்முடைய பிரிய இரட்சகர் "அவமானத்தை எண்ணாமல் " அதைக் குறைந்த மதிப்புக்குள்ளாக கருதி, வையப்படுத்தலின் மத்தியிலும், வைய்யப்பட்டாலும், பிதாவை பிரியப்படுத்துவதிலேயே தன்னுடைய சித்தத்தை ஸ்திரப்படுத்தினார். இதிலும், மற்றெல்லாவற்றிலும், நம்முடைய ஸ்தோத்தரிக்கப்பட்ட கர்த்தர் நமக்கு ஒரு மாதிரியாக இருக்கிறார். நம்முடைய பங்கில் வரும் நிந்தை எதுவாயிருந்தாலும், நிந்திப்பதற்கு பதில் நிந்திக்கும் சோதனை எதுவாகிலும் நமக்கு வந்தாலும் அவரைப் போல "அவமானத்தை எண்ணாமல் " நம்முடைய பங்காயிருக்கிற நிந்தையின் மத்தியிலும், நிந்திக்கப்பட்டாலும் கர்த்தரைப் பிரியப்படுத்துவதில் நம்முடைய சித்தத்தை உறுதிப்படுத்துவோமாக.
**-P 33, 177.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

**மத் 26:65; 27:13,27-30,39-44,49; சங் 22:6,7,16,17; 31:11-13; 35:20,21; 71:10,11; 109:25; ஏசா 50:6; 53:7; எபி 12:3.**

**கோபுர வாசிப்பு: Z `13, 35 (R 5172).**

**வினாக்கள் : இந்த வசனம் இந்த வாரத்தில் எனக்குக் குறித்துக் காட்டியது என்ன?**

**எந்தச் சந்தர்ப்பங்கள்? எந்த அனுபவங்கள்?**